மஹர சிறையிலிருந்து தப்ப முயன்ற 5 கைதிகள் சுட்டுக்கொலை!

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆவணி 22 இதழ் 202
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 7 — 9 — 1993

(தொழும்பு)

மஹர சிறைச்சாலையிலிருந்து நேற்று அதிகாலை ஒரு மணியளவில் தப்பிட முயன்ற 25 கைதிகளுள் ஐவர் பொலிசாரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இச்சம்ப வதில் ஐந்து சிறைக்காவலர்கள் காயமடைந்தனர். காயமடைந்த ஐந்து சிறைக் காவலர்களும் பருத்துறை மனைக்கு உடனடியாக சிகிச்சைக்காக எடுத்துச் செல்லப்

(4-ம் பக்கம் பார்க்க)

பாதுகாப்பு இணை அமைச்சர் நேற்று கிழக்கு விஜயம்

(தொழும்பு)

பிரதி பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ஜோன் அமரதுங்கா நேற்று கிழக்கு மாகாண இராணுவ முகாம்களுக்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டார். இந்தப் பகுதிகளிலுள்ள இராணுவ பொலிஸ் நிலையங்களின் பாதுகாப்பு பற்றி நேரில் பார்த்து அறிந்து

(4-ம் பக்கம் பார்க்க)

★ பந்தோபஸ்துத்துறையில் பாரிய மாற்றம்

கூட்டுப்படை அமைப்புகலைப்பு

புதியபாதுகாப்புகுழு நியமனம்

(தொழும்பு)

ஸ்ரீலங்காவின் பந்தோபஸ்த்துத்துறையில் நேற்று பாரிய மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. வடக்கு கிழக்குப்பகுதியில் போர் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து வந்த கூட்டுப் படைகள் தலைமையகம் நேற்று திடீரென ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவினால் கலைக்கப்பட்டது. அதற்குப் பதிலாக உயர்மட்ட பாதுகாப்பு ஒருங்கிணைப்பு குழு ஒன்று பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்டது.

(4ம் பக்கம் பார்க்க)

பாதுகாப்புசெயலர்ராஜினாமா

(தொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஏயர்சிவ் மாஷல் வோல்டர் பெர்னாண்டோ தமது பதவியை நேற்று ராஜினாமா செய்துள்ளார். தனிப்பட்ட காரணங்களுக்காக இவர் தமது பதவியை ராஜினாமா செய்ததாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தப் பதவிக்கு இதுவரை கூட்டுப்படைத் தலைமை தளபதியாக இருந்த ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவை ஜனாதிபதி உடனடியாக நியமித்துள்ளார்.

(4-ம்பக்கம் பார்க்க)

ஹமில்டன் தலைமை வகிப்பு!

(தொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் புதிய செயலர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க தலைமையில் உடனடியாக உயர்மட்ட பாதுகாப்பு ஒருங்கிணைப்புக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. முப்படைத் தளபதிகள், பொலிஸ்மா அதிபர், தேசிய புலனாய்வு பணிப்பணிப்பாளர், விசேட அதிரடிப்படைத் தளபதி ஆகியோருக்கு இடம்பெற்றுள்ளனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

ஹமில்டனின் புதிய பதவிகள்

(தொழும்பு)

பாரிய தொழும்புப் பிரதேசத்தில் பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கைகளுக்கான ஒருங்கிணைப்பு குழுவின் தலைவராக ஜெனரல் ஹமில்டன் வனசிங்க நேற்று முதல் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

(4-ம் பக்கம் பார்க்க)

போருக்கு ஆயத்தமாகும் போது ஏன் இந்த மாற்றம்? பி. பி. சி.

(தொழும்பு)

வடக்கு-கிழக்கு பகுதிகளில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை தலைமை தாங்கி முன்னின்று நடாத்தும் பொறுப்பு இனிமேல் பாதுகாப்பு அமைச்சில் இயங்கும் சபை ஒன்றிடம் வழங்கப்படும் என பி. பி. சி. நேற்று தெரிவித்தது.

கூட்டுநடவடிக்கை தலைமையகம் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவினால் உருவாக்கப்பட்ட இருவருடங்களுக்கு இடையில் அவ்அமைப்பு கலைக்கப்படுவது இங்கு கவனத்தில் கொள்ளவேண்டியுள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

ராணுவ அணுகுமுறையில் ஏற்பட்ட தோல்வியே காரணம்!

(தொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரைத் தீவிரப்படுத்தவும் சர்வதேச அரங்கில் தனது நிலைப்பாட்டை உறுதி செய்து கொள்ளும் நோக்கமாகவுமே ஜனாதிபதி டி. பி விஜேதுங்கா பாதுகாப்புத் துறையில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் அரசியல்துறை விரிவுரையாளரான டாக்டர் சி. சரவணமுத்து பி பி. சி.க்கு வழங்கிய பேட்டியில் இவ்வாறு தெரிவித்தார்.

(4-ம்பக்கம்பார்க்க)

காரைநகரிலிருந்து ஷெல் தாக்குதல்

(வலிகாமம்மேற்கு)

நேற்று பிற்பகல் 3 மணியளவில் சுழிபுரம் பிரதேசத்தை விடுவிட்டு நோக்கி மிட்டு ஹெலி ஒன்று சென்ற பின் காரைநகரிலிருந்து ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

சுழிபுரம், பொன்னாலை மூளாய்ப்பகுதிகளிலுள்ள குடியிருப்புக்களை நோக்கி ஏவப்பட்ட ஷெல் குண்டுகள் கரையோரப் பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன. இத்தாக்குதலினால் சேதம் எதுவும் ஏற்பட்டதாகத் தெரியவரவில்லை.

(139 இ)

செஞ்சிலுவை அதிகாரிகள் கைது:

யாழ். செஞ்சிலுவை அதிகாரிகள் வன்மையாகக் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

மன்னாரில் செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளை இராணுவம் கைது செய்து கொழும்புக்குக் கொண்டு சென்றமை, யாழ்ப்பாண செஞ்சிலுவைச் சங்கம் கடுமை வன்மையாகக் கண்டித்துள்ளது.

இராணுவத்தினால் கைது செய்யப்பட்டு, கொழும்புக்கு கொண்டு வந்திருக்கும் மன்னார செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளின் விடயத்தில் உடன்

(4-ம் பக்கம் பார்க்க)

அடுத்த வருடம் 3700 மாணவர்களுக்கு மகாபொல கிடைக்கும்

(தொழும்பு)

அடுத்த ஆண்டு வடக்கு கிழக்கு மாகாண மாணவர்கள் உட்பட 3700 பேருக்கு மகாபொல புலமைப் பரிசுகள் வழங்கப்படுமென அரசு நேற்று அறிவித்தது.

இவ்வாண்டு 3600 மாணவர்களுக்கு மகாபொல புலமைப் பரிசுகள் வழங்கப்பட்டுள்ளதென்றும், இதுவரை 30ஆயிரம் மாணவர்கள் மகாபொல பரிசுகளைப் பெற்றுள்ளதாகவும் அரசு மேலும் அறிவித்தது.

(வி-இ)

பதில் அமைச்சர்களாக இருவர் பதவியேற்பு

(தொழும்பு)

இரு கருத்திட்ட அமைச்சர்கள், நேற்று பதில் அமைச்சர்களாக ஜனாதிபதி திரு. டி. பி. விஜேதுங்கா முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்கள்.

பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் திரு. ரூபா கருணாரட்னவும், கைத்தறி, நெசவுத்துறை அமைச்சர் திரு யூ பி விஜேசேகரனும் வெளிநாடுகளுக்குச்சென்றிருப்பதினால் முறையே பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மனோ விஜயரட்னவும், நெசவுத்தொழில் கருத்திட்ட அமைச்சர் ஜனாப் அப்துல் மஜீதும் பதில் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டனர்.

(வி-இ)

விளம்பரம்

செல்வம் ஆட்ஸ்
சுன்னாகம்

அச்சுக் கோர்ப்பாளர் தேவை. றபர் சீல் தயாரிப்பதில் அனுபவமுடையவர்களும், பழைய ஆர்வமுள்ள G C E O/L கிற்தியடைந்தவர்களும் நேரில் வரவும். (சி-443)

அராலியூரின் நாடகங்கள்

இலங்கை வானொலியின் பல சேவைகளிலும் ஒலிபரப்பப்படுகின்ற அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நாடகங்களை நீங்களும் படியுங்கள். நடியுங்கள் — 'கெட்டிக்காரர்கள்'' 2 ''முதலாம்பிள்ளை'' 30/- 19 நாடகங்கள். (சி-421)

வியாபாரிகளுக்கு

நூல், லேஸ், சிக்கிரி, கோல்ட் கவறிங் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் மொத்தமாகப் பெற்றுக் கொள்ளலாம். ஜெயா அழகு சாதன மாளிகை, 177A, மின்சாரநிலையவீதி, யாழ்ப்பாணம். (எ-3400)

நெசவாளர்களுக்கு
நூல்கள் விநியோகம்
(யாழ்ப்பாணம்)

''யாழ். மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவுச்சங்கம் அதன் அங்கத்துவ நெசவாளர்களுக்கு நாளை 8ம்திகதி புதன்கிழமை தொடக்கம் நூல்களை விநியோகம் செய்ய இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று
(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த வலிடுக்கோட்டை, கழிபுரம் பண்டத்தரிப்பு, காரைநகர் கொத்தணிப் பாடசாலைகளின் அதிபர்கள் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு வலிடு திருஞானசம்பந்த வித்தியாசாலையிலும், தெல்லிப்பழை, அம்பனை, மகிளாகம், இளவாலை, காங்கேசன்துறை, அளவெட்டி கொத்தணிகளைச் சேர்ந்த பாடசாலைகளின் அதிபர்கள் கூட்டம் நாளை புதன்கிழமை பி. ப. 2 மணிக்கு மருதனார்மடத்திலுள்ள யூனியன் கல்லூரியிலும் நடைபெறும். (சி)

கலந்துரையாடல்
(யாழ்ப்பாணம்)

நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ள பொதுக்கூட்டத்தில் சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் அமைப்புக்கள், பலநோக்குக் கூட்டுறவுச்சங்கஇயக்குநர்கள், ஊழியர்கள், தெங்குபனம்பொருள் உற்பத்தி விற்பனை கூட்டுறவுச்சங்கங்களின் இயக்குநர்கள், ஊழியர்கள், கிராமிய உழைப்பாளர் சங்கம், தச்சுத்தொழிலாளர் சங்கம், சீமெந்துக்கட்டிடத்தொழிலாளர் சங்கம், கிகை ஆலைகாரர்ப்பாளர் சங்கம், வனப்புத் தொழிலாளர் சங்கம், நகைத் தொழிலாளர்சங்கம், தமிழ் பேசும் போக்குவரத்து ஊழியர் சங்கம், வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கம், ஆலை உரிமையாளர்கள், பேக்கரி உரிமையாளர்கள் சங்கம், வடமாநில சுருட்டுத்தொழிலாளர் சங்கம், ஆங்கில மருந்துவிற்பனையாளர் சங்கம் முதலிய வெகுஜன அமைப்புக்களின் உறுப்பினர்கள் கலந்து கொள்ளுமாறு கோரப்படுகின்றனர். (சி)

அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு

கோண்டாவில் வடக்கு மதிதிய கிராம முன்னேற்றச் சங்கத்தால் நடாத்தப்பட்டு 6-9-93 ல் குலுக்கப்படவேண்டிய அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு நடாத்த முடியாத காரணத்தால் மறு அறிவித்தலையடை பிற்போடப்பட்டுள்ளது என அறிவிக்கின்றோம்.

— நிர்வாகம்

(சி 446)

அச்சுக் கோர்ப்பாளர் தேவை

அச்சுக் கோர்ப்பாளர் தேவை. அனுபவமும் உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்ப முடிவுத் திகதி 15-09-93. தொடர்பு: விளம்பர இல. A 3399, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (எ 3399)

அறிவித்தல்

யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவிருக்கும் வர்த்தகர்கள், வர்த்தக ஊழியர்கள் சந்திப்பு கூட்டத்திற்கு அனைத்து வர்த்தக ஊழியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நிர்வாகம்
யாழ் வர்த்தக ஊழியர் சங்கம்
235, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (எ 3401)

90-ம் நாள் நினைவஞ்சலி

செல்வன்
தம்பிராஜா தர்மபாலன்
[பாலு]
(தொட்டிலடி — சங்நானை)

தோற்றம்: 23-10-1971 மறைவு: 10-06-1993

திதி: 07-09-1993 (செவ்வாய்)

எங்கள் அன்பு மகனே,
எம் கண் முன்னால் இல்லாது
பிறநாடு சென்று உழைத்து
உனது அம்மா, அப்பா, சகோதரத்தைத்
தப்பாதற்ற எண்ணிச் சேகரையிற்
இடைநடுவில் ருமேனியாவில்
வாலன் உன் உயிரைப் பறித்தான்.

இதை நினைக்கும்போது எங்கள் உள்ளங்கள் குமுறுகின்றன. உமது ஆத்மசாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம்.

என்றென்றும் உம் பிரிவால் துயருறும்:
அம்மா, அப்பா, சகோதர சகோதரிகள்,
உறவினர்கள், நண்பர்கள்.

தொட்டிலடி,
சங்கானை. (சி-444)

1-ம் ஆண்டு நினைவஞ்சலி

★
தோற்றம்:
16-2-1924
★
மறைவு:
19-8-1992
★
திதி:
7-9-1993
★

திருமதி
சிவபாக்கியம் நல்லையா

ஆண்டொன்று போனாலும்
ஆறாத்துயரில் ஆழ்ந்திருக்கும்
இதயங்களின் அஞ்சலிகள்

மக்கள், மருமக்கள், பேரமக்கள், உறவினர்கள்.

36, அரசடி புகையிரத வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (சி-445)

மணிவிழா வாழ்த்து

அறுபது ஆண்டு அகவையில்
மணிவிழாக் காணும்
இலக்கிய வித்தகர் - சைவப்புலவர் - எழுத்தாளர்
அதிபர்
அரு. வை. நாகராஜன்
அவர்கள்

இன்று போல் என்றும்
கல்வி—சமயம்—சமூகப் பணிகளுடன்
கலை—இலக்கியப் பணிகள் புரிந்து
பல்லாண்டு வாழ வாழ்த்தி
மகிழ்கின்றோம்.

ரீ. கே. பாலசுப்பிரமணியம்
''பொபி ட்ரவல்ஸ்'',
443 C, காவி வீதி,
கொழும்பு-04.
07-09-1993
(சி-439)

மணிவாக்கு

எதுவுமே அறியாதவன் எல்லாவற்றிற்கும் துணிவான்.
சார்ல்ஸ் எச். ஸபர்ஜன்

நமது நோக்கு

சகல கலாவல்லவன்

"போராளிகள் போர்க்களையில் மட்டுமன்றி சகல கலைகளையும் கற்றுச் சகல கலாவல்லவர்களாக உருவாக வேண்டும். அவர்கள் எதையும் சாதிக்க வல்லவர்கள் என்பதை நிரூபித்துக்காட்டியுள்ளாய்!" எனத் தலைவர் வே. பிரபாகரன் போராளிக் கலைஞர் தினேசின் மிருதங்க அரங்கேற்றத்தின் போது அனுப்பிய ஆசிச்செய்தியிற் கூறியுள்ளார்.

"போர்க்களஞ் சுவேனோ? பொடியாக்குவேனோ!" எனத் தோள் தட்டும் போராளி ஒருவர், தோள் தட்டி நாதமெழுப்பும் நற்கலைஞராக மிளிர்ந்தவர்! அதாவது தோரணியானமிருதங்கவித்துவானாகியுள்ளார்!

இலட்சியப்பற்றோடு நிற்பவர்கள் வெறும் இயந்திரங்களல்ல, இதயமும் உள்ளவர்கள்; இதயத்தைச் செம்மைப்படுத்தும் கலையிலும் வல்லவர்கள்!

மட்டுநகர் உணர்ச்சிக் கவிஞரின் உடன்பிறப்பும் ஒரு போராளி; ஆனால் வேங்குழலாற் பலரையும் கவர்ந்த கலைஞர்.

ஆனையிறவுச் சமரில் இன்னுயிர் தந்த கடாரொளி என்ற பெண் போராளி, தனது கானத்தாற் பலரது கானத்தைக் கவர்ந்தவர்!

இப்படிப் பல போராளிகள் கலைவல்லுனர்களாக இருந்திருக்கிறார்கள்.

இறக்குமதிக் கலைகளிலே ஆழ்ந்து மயங்கிப்போயிருந்த எமக்கு, தமிழீழ விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் சொந்தக்கலைகளை மீள மலர்த்த, புத்துணர்ச்சி ஊட்டி வளர்த்து வருகின்றது.

கிரேக்கக் கல்விமுறையில், தத்துவஞானி பிளேட்டோவின் கருத்தில் மனிதன் முழு ஆளுமை வளர்ச்சிக்கான கல்வியைப் பெறவேண்டும் என வலியுறுத்தப்பட்டது; சகல துறைக்கல்வியும் தேவை எனப்பட்டது.

இன்றோ, நிபுணத்துவம் என்ற பெயரில், ஒருகில தொழில்களை நாடிமாணவர் ஓடி அலைகிறார்கள்; வேலையும் கிடைப்பதில்லை. வாழ்க்கையையும் முழு மையாக முகம் கொடுத்து வாழ முடியவில்லை!

உலகப் புகழ்பெற்ற வெளிநாட்டு மேதை ஐயன்ஸ்டீன் சிறந்த இசைக்கலைஞராகத் திகழ்ந்தவர். இந்து மறுமலர்ச்சி வீரர் விவேகானந்தர் இசை பற்றிய நூல் வெளியிட்டவர் சகல கலாவல்லுனராக விளங்கினார். "வாழ் நூல்" என்ற ஆய்வுநூலை வெளியிட்டார்.

போராளிக் கலைஞர் தினேசின் மிருதங்க அரங்கேற்றம், தமிழீழ மக்களின் கலை, பண்பாட்டு வளர்ச்சிக்கு மேலும் புத்தூக்கம் அளிக்கும் என நம்புகிறோம்!

தமிழகத்தில் மீண்டும் புலிகள் மத்திய அரசு ஆழ்ந்த கவலை

தடுத்து நிறுத்த உத்தரவு

(சென்னை)

தமிழகத்திலே விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகள் மீண்டும் அதிகரித்து வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் கவலை தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் தங்களது நடவடிக்கைகளை விரிவுபடுத்த புலிகள் முனைந்து வருகிறார்கள். புலிகளின் நடவடிக்கைகளை ஒடுக்க முயற்சிகளை மேற்கொள்ளுமாறு தமிழக முதல்வர் ஜெயலலிதாவிற்கு மத்திய அரசு ஏற்கனவே எழுதியிருப்பதாகவும் திரு. சவான் குறிப்பிட்டார்.

தமிழ் பேசும் மக்களுக்கும் இலங்கையிலிருந்து அகதிகளாக தமிழகம் வந்திருப்போருக்கு மிடையே வேறுபாடுகளை கண்டறிவது மிகக் கடுனமாக உள்ளது. புலிகளிலிலர் வீரநாடகா உட்பட அண்டை மாநிலங்களுக்கும் ஊடுருவியிருப்பது சாத்தியமே என குறிப்பிட்ட அமைச்சர் அவர்களில் சிலர் சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பன் கூட்டத்தில் சேர்ந்திருக்கக் கூடுமெனவும் தெரிவித்தார்.

தமிழக அகதி முகாம்களில் தங்கியிருக்கும் இலங்கைத்தமிழ் அகதிகளிடையே விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் அதிகரித்திருப்பதாக மத்திய அரசிற்கு தகவல் கிடைத்துள்ளது இது தொடர்பாக உள்துறை அமைச்சரகம் தமிழக அரசின் கவனத்தை ஈர்த்துள்ளது.

தமிழக முதல்வர் ஜெயலலிதா மாநில பந்தோபஸ்து குறித்து மத்திய அரசின் எச்சரிக்கைக்கு மிகைப்படுத்தி கருத்து வெளியிட்டிருப்பது குறித்தும் அமைச்சர் சவான் கருத்து வெளியிட்டார். (சி)

'தமிழ் — சிங்கள அரசியல்வாதிகள் இந்தப் போரில் பாதிப்புறவில்லை'

(தொழும்பு)

அரசியல் அதிகாரத்தை பெற முயலும் தமிழ், சிங்கள அரசியல்வாதிகள் எவரும் தற்போதைய வடக்கு-கிழக்கு போரினால் பாதிக்கப்படவில்லை எனபுளொட் சித்தார்த்தன் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்: இதற்கு மாறாக இப்போரினால் இளைஞர்கள், யுவதிகள் மற்றும் படையினரே கொல்லப்படுகிறார்கள் பெருமளவு சொத்துக்களும் பொருளாதார வளங்களும் அழிகின்றன

தேவையற்ற இந்த யுத்தத்திற்கு அரசு பெருமளவு பணத்தை செலவிட்டு வருகிறது. பிரச்னையை தீர்ப்பதன் மூலம் இந்த அழிவுகளை தடுக்கலாம் எனவும் கூறியுள்ளார்.

வடக்கு-கிழக்கில் அரச படைகளுடன் இணைந்து புளொட் அமைப்பும் செயற்பட்டு வருவதும் தெரிந்ததே. (கி-)

கிழக்கில் மீன்களுக்கு புதிய வகை நோய்

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் மீன்களுக்கு ஒரு வகை நோய் வேகமாகப்பரவி வருகின்றது.

மீன்களின் உடலில் புழுக்கள் தோன்றியுள்ளதால் இதனை வாங்குவதற்கு எவரும் முன்வருவதில்லை. இதனால் மீன்வியாபாரம் பெருமளவில் வீழ்ச்சியடைந்துள்ளது.

ஆறு, குளம் என்பனவற்றில் பிடிபடும் கணவாய் உட்பட பலவகையான மீன்களிலும் புழுக்கள் தென்படுகின்றன. கடந்தவருடத்திலும் இதே காலப்பகுதியில் இந்நோய் மீன்களில் தோன்றியுள்ளது குறிப்பிடத்தக்கது. (71 கி)

மாதாந்த உதவிப்பணம் இரட்டிப்பாக அதிகரிப்பு

(வட்டுக்கோட்டை)

ஊதியமின்றி கஷ்டப்படும் வறிய மக்களுக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினால் மாதந்தோறும் வழங்கப்பட்டு வரும் மாதாந்த உதவிப் பணம் இனிமேல் இரண்டு மடங்காக வழங்கப்படவுள்ளது.

இதுவரை இக்கொடுப்பனவு ரூபா நூறு முதல் முந்நூறு ரூபாவரை அதிகாரிகளின் இயல்பின் பேரில் வழங்கப்பட்டுவந்தது. இக்கொடுப்பனவே இனிமேல் இரட்டிப்புப் பணமாக வழங்கப்படவிருக்கிறது

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சினால் மாதந்தோறும் வழங்கப்படும் மாதாந்த உதவிப்பணத்தை இதுவரை சுமார் இரண்டுலட்சத்து எழுபத்தோராயிரம் வறியமக்கள் பெற்று வந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (139)

வன்னி மாவட்டத்தில் 1000 வீடுகள் அமைப்பு

(வவுனியா)

வன்னி மாவட்டத்தில் அகதிகளுக்காக 1000 வீடுகள் அமைக்கும் திட்டம் பூர்த்தியாகிவிட்டது.

வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சினால் இவ்வருடம் மார்ச்சில் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்திற்கு 12 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்படி மாறக்பைக்குளத்தில் 275 வீடுகளும் வீரபுரத்தில் 400 வீடுகளும், முதலிக்குளத்தில் 275 வீடுகளும், தரண்டிக்குளத்தில் 50 வீடுகளும் அமைக்கப்பட்டுள்ளன.

தேசிய நீர் விநியோக வடிகால் அமைப்புச் சபை இத்திட்டத்தின் கீழ்வரும் ஒவ்வொரு 20 வீடுகளுக்கும் ஒவ்வொரு கையால் இயக்கும் நீர்ப்பம்பியும் இயந்திரங்களை வழங்கியுள்ளது. (71-கி)

தெகிவளை மிருகக் காட்சிசாலைக்கு புதிய மிருகங்கள் வருகிறது

(கொழும்பு)

தெகிவளை மிருகக் காட்சிச் சாலைக்கு இம்மாத இறுதிக்குள் வெளிநாட்டிலிருந்து பல்வேறு மிருகங்களும் பறவைகளும் வந்து சேரவுள்ளன.

ஜேர்மன் மிருகக்காட்சியிலிருந்து பென்குவின் பறவைகளும் ஒஸ்ரேலியாவிலிருந்து மிருகக்காட்சிச் சாலையிலிருந்து சீகோ என்ற ஜோடிப் புலிகளும், காட்டுக் குதிரைகளும் இங்கு வந்து சேரவுள்ளன.

இதேவேளை இலங்கையிலுள்ள நாகபாம்புகளுக்கும் சாரைப்பாம்புகளுக்கும் வெளிநாட்டு மிருகக்காட்சிச்சாலைகளில் கிராக்கி ஏற்பட்டிருப்பதால் அவற்றை இங்கிருந்து ஏற்றுமதி செய்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (71-கி

காடு வளர்க்க பாடுபடுவோம்

ஓய்வூதிய முற்பணம்

(யாழ்ப்பாணம்)

உரிய காலத்தில் ஓய்வூதிய வவுச்சர்கள் வராதபோதும் ஓய்வூதியத்தில் 75 சத வீதமான பணத்தை முற்பணமாக பெற யாழ் மாவட்ட மக்கள் வங்கி வழங்கியுள்ள சலுகை மக்கள் வங்கியிலிருந்து இலைப்பாறிய ஊழியருக்கே பொருந்தும் என யாழ்ப்பாண மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார். —ம

இராசிபலன்

07-09-1993
செவ்வாய்க்கிழமை
(தமிழுக்கு ஆவணி 22)

ஷஷ்டி மாலை 6-44 வரை. பரணி காலை 7-02 வரை. இராகுகாலம் மாலை 3-04 முதல் 4-34 வரை, சுபநேரம் காலை 10-34 முதல் 12 04 வரை, சித்தயோகம், காரிய சித்திகை விரதம்.

மேடம்: நண்பர்களால் நலம், முயற்சி வெற்றி, பொருள் லாபம்.

இடபம்: மனத்தாங்கல், பயண தொல்லை, அலைச்சல்

மிதுனம்: சுபச்செய்தி, தொழில் சிறப்பு, உறவினர் வருகை

கடகம்: அதிக முயற்சி, தலைபாரம், மனக்களிப்பு

சிங்கம்: பிறஇட வாசம், மறதி, கண்ணில் ரோகம்.

கன்னி: சந்தோஷ நிலை, காரியதடை, பிறர் கோபம்.

துலாம்: கடின வாசகங்கள், தொழில் லாபம், கடன்வசூல்.

விருச்சிகம்: அதிகாரிகள் நன்மை, புதிய முயற்சி, உல்லாசம்.

தனுசு: பொருள் விரயம், அவசர முடிவு, வெறுப்பு.

மகரம்: பெண் விவாதம், தொழில் சிந்தை, பதவிடம்.

கும்பம்: பெரியோர் உபதேசம், மனைவி பெருமை, தானதர்மம்.

மீனம்: போஜன வெறுப்பு, முயற்சி தோல்வி, பழிவாங்கல்.

ஜோஸ்யர்

சுவாமி விவேகானந்தர் நினைவு அகில இலங்கை ரீதியில் கட்டுரைப் போட்டி

(மானிப்பாய்)

சுவாமி விவேகானந்தர் சிகாகோ நகரில் நிகழ்த்திய உரையின் நூற்றாண்டுவிழாவை முன்னிட்டு அகில இலங்கை இந்து மாமன்றம் கல்லூரி மாணவ மாணவியரிடையே அகில இலங்கை ரீதியில் கட்டுரைப்போட்டிகளை நடாத்தவுள்ளது.

தமிழ்மொழி மூலமான ஆரம்ப பிரிவு மாணவர்களது கட்டுரை இராமகிருஷ்ணரும் சுவாமி விவேகானந்தரும் என்ற கருப்பொருளில் 100 சொற்களுக்குள் அமைதல் வேண்டும். இடைநிலைப் பிரிவு மாணவரது கட்டுரை 250 சொற்களுக்குள் சிகாகோவில் சுவாமி விவேகானந்தர் என்ற கருப்பொருளில் எழுத வேண்டும். மேற்பிரிவுமாணவர்களது கட்டுரை 400 சொற்களில் சுவாமி விவேகானந்தரும் சமுதாய மறு மலர்ச்சியும் என்ற பொருளிலும் அமைதல் வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது

சகல விண்ணப்பங்களும் 30-9-93க்கு முன்னர் பொதுச் செயலாளர் அகில இலங்கை இந்து மாமன்றம் இல 101/1, சேர் கிற்றம்பலம் கார்டினர் மாவத்தை, கொழும்பு-2 என்னும் முகவரிக்கு அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது. 71-கி

யாழ். மாவட்ட சகல வர்த்தகர் சங்கங்களின் உறுப்பினர்களுக்கும் ஊழியர்களுக்கும் வடபிராந்திய வர்த்தகர் சங்கங்களின் சமாஜம் விடுக்கும்

ஓர் முக்கிய அறிவித்தல்

இன்று 07-09-93 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் ஓர் முக்கிய கலந்துரையாடல் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அவர்களால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இரு பகுதியினருக்கும் இது முக்கியமான கலந்துரையாடலாக இருப்பதால் சகல வர்த்தக உறுப்பினர்களும், ஊழியர்களும் தவறாது கூட்டத்தில் பங்குபற்றுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி.

இங்ஙனம்
வடபிராந்திய வர்த்தகர் சங்கங்களின் சமாசம்.

(எ-3403)

குமாரியின் தபால்பொதிகள் அனுப்பி வைப்பு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை துறைமுகத்தில் அதிகாலையில் உணவுப் பொருள்களை இறக்கிய நாகுணு கப்பல் இன்று கொழும்பு நோக்கிப்புறப்படவுள்ளது.

இதேவேளையில் இத்துறைமுகத்தில் பொருள்களை இறக்கிக்கொண்டு நிற்கும் குமாரி கப்பல் பொருள்கள் இறக்கி முடிந்ததும் நாளை மறுதினம் கொழும்பு நோக்கிப் புறப்படவுள்ளது.

இந்தக் கப்பலில் வெளி மாவட்டங்களுக்கான ஒரு தொகுதி தபால் பொதிகள் எடுத்துச் செல்லப்படவுள்ளதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வவுனியா வட்டாரங்கள் தெரிவித்தன.

பயணிகள் சேவையில் ஈடுபட்டிருந்த நரோமா கப்பல் திருத்தவேலைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாலும் திருத்த வேலைகள் யாவும் பூர்த்தியானபின் மீண்டும் சேவையில் ஈடுபடுமென்றும் சர்வதேச செஞ்சிலுவை வட்டாரங்கள் தெரிவித்தன. (162-இ)

பேச்சுவார்த்தை விபரங்களை மக்களுக்கு வெளியிடவேண்டும்

— யாழ். அரச அதிபர் பேட்டி

(கொழும்பு)

"வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு, உண்மையான ஒரு தீர்வு காணப்படவேண்டுமானால், விடுதலைப்புலிகளும் அரசும் நேரடியாகப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவேண்டும்" இவ்வாறு யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் அண்மையில் கொழும்பில், "லங்காதீப" சிங்களப் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

யாழ். அரச அதிபர் தனது பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளதாவது: விடுதலைப்புலிகளும் - அரசும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும்பட்சத்தில் அதன் முழுவிபரங்களையும் உடனுக்குடன் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்தப்படவேண்டும். அப்போதுதான் சமாதானத்தை எதிபடுத்திக் கொள்ள மிகஇலகுவாக இருக்கும்.

இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு ஒரு போதும் சாத்தியப்படாது. இந்த யுத்தத்தை நிலையாகமாக மாற்றும் ஒரு சிலரைத் தவிர பெரும்பான்மையினர் இதனை வெறுக்கின்றார்கள் அரசியல் ரீதியில் இப்பிரச்சினைக்கு தீர்வுகாண உண்மையான புரிந்துணர்வு காட்டப்படவில்லை என்று அவர் கூறினார். (இகி-162)

கிரிக்கெட்!

இலங்கை விக்கெட்டுகள் 168 ஓட்டங்களுக்கு சரிந்தன

(கொழும்பு)

இலங்கைக்கும் - தென்னாபிரிக்காவுக்குமிடையே நேற்று கொழும்பு எஸ். எஸ். ஸி மைதானத்தில் ஆரம்பமான 2வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில், இலங்கைக் கேப்டன் நேற்று தேனீர் இடைவேளைக்கு சற்றுப் பின்பு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்த மொத்தம் 168 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

தென்னாபிரிக்க கோஷ்டியின் சிறப்பான பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாத இலங்கை வீரர்கள் அடுத்தடுத்து ஆட்டமிழந்தார்கள். வீரர் குஸ் 48 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

நேற்று முதல்நாள் ஆட்டம் முடிவடையும்போது தென்னாபிரிக்க விக்கெட்டுகள் நஷ்டமின்றி 48 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. (வி)

1989-ல் காலமான

மாக்கோஸின் உடல் பிலிப்பைன்ஸ் வருகிறது

(மணிலா)

பிலிப்பைன்ஸ் நாட்டின் முன்னாள் ஜனாதிபதியான காலஞ்சென்ற பேடினன்ற மாக்கோஸின் உடல் இன்று பிலிப்பைன்ஸ் ஸுக்கு கொண்டு வரப்பட உள்ளது. இராணுவமும் பொலிஸாரும் இதன் பொருட்டு உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

1989-ம் ஆண்டு அமெரிக்காவில் காலமான மாக்கோஸின் உடல் இன்று விசேட விமானம் மூலம் பிலிப்பைன்ஸ் நாட்டின் இனஸ் கோஸ் நகருக்கு அவரின் மனைவி கொண்டு வரப்பட இருக்கின்றது.

பிலிப்பைன்ஸ் நாட்டின் தலைநகரான மணிலாவுக்கு, இறந்த மாக்கோஸின் உடலை கொண்டு வருவதற்கு அரசு தடைவிதித்துள்ளது. அரசின் தடையை மீறி, மாக்கோஸின் உடலைத் தாங்கிவரும் விமானம் மணிலா விமான நிலையத்தில் இறங்க முற்பட்டால் விமான நிலையத்தை உடன் மூடிவிடும்படி அரசு அவசர உத்தரவையும் பிறப்பித்துள்ளது.

இதற்கிடையில் மாக்கோஸின் இறந்த உடல் பிலிப்பைன்ஸ் நாட்டுக்குள் கொண்டு வரப்படுவதினால் அங்கு மாக்கோஸின் ஆதரவாளர்களால் பெரும் குழப்பங்கள் ஏற்பட்டுவிடுமென செய்திகள் தெரிவிக்கின்றன. வி-இ

மஹர சிறையிலிருந்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டனர்.

புகைக்குண்டு ஒன்றை வெடிக்கவைத்த பின்னர் இவர்கள் தப்பியோட முயற்சித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

சிறைச்சாலையின் சுவரைத் தாண்டி தப்பியோட முயற்சித்த போதே பொலிசார் மேற்படி ஐவரையும் துப்பாக்கியால் சுட்டுக்கொன்றனர் என சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவர்களுள் மூவர் 1980ம் ஆண்டு அரசுக்கெதிராக ஜே. வி. பி மேற்கொண்ட ஆயுதப் புரட்சியில் சம்பந்தப்பட்டவர்கள் என்றும் மற்றைய இருவரும் கொலைச்சம்பவம் ஒன்றில் ஈடுபட்டவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் குறித்து சிறைச்சாலை அதிகாரிகளும் பொலிசாரும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க-இ)

பத்தோபஸ்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புதிய பாதுகாப்பு செயற்பாடின் படி பகிரங்க ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள ஆயுதப்படையினரும், பொலிஸ் படையில் உள்ளவர்களும், இராணுவத் தளபதி கட்டுப்படுத்தும் தளபதி விசாரணைப்படை தளபதி, பொலிஸ் மா அதிபர் ஆகியோரின் கீழ் தொடர்ந்து செயற்படுவார்கள். (சி-இ)

ஹமில்டனின் புதிய பதவிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி

பாதுகாப்பு அமைச்சின் செயலராகவும், உலோமட்ட பாதுகாப்பு ஒருங்கிணைப்பு குழுவின் தலைவராகவும் லடமையாற்றும் ஹமில்டன் வனசிங்க மேலதிகமாக மேற்படி பதவியையும் வகிக்கவுள்ளார்.

ஏற்கனவே இவர் வெளிநாடொன்றில் தூதராக நியமிக்கப்பட இருந்ததாகவும் ஆனால் ஹமில்டன் அதனை மறுத்துவிடவே தற்போது மிகுந்த முக்கியத்துவத்துடன் அவர் மேற்படி மூன்று பதவிகளையும் வகிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி-இ)

பாதுகாப்பு செயலர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸா காலத்தில் விமானப்படைத்தளபதியாக இருந்த வால்டர் பெரேராவோ அந்தநேரத்தில் முப்படைத் தளபதிகளினதும் அதிகாரம் குறைக்கப்பட்டு மீண்டும் கூட்டுப்படைத் தலைமை தளபதி ஹமில்டன் வனசிங்காவிடம் அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டதை தொடர்ந்து கருத்து முரண்பட்டு தமது பதவியிலிருந்து வெளியேற முற்பட்டார்.

எனினும் ஜனாதிபதி பிரேமதாஸாவின் சமரச முயற்சியை அடுத்து ஹமில்டனுடன் முரண்பட்டவாறே விமானப்படைத் தளபதியாக இருந்தார். பின் அதிலிருந்து ஓய்வு பெற்று பாதுகாப்பு ராஜாங்க அமைச்சின் செயலராக நியமிக்கப்பட்டார். இக் காலத்திலும் இவர் அடிக்கடி பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஜெனரல் கிறிஸ் ரணதுங்கவுடன் கருத்து மோதல்களில் ஈடுபட்டு வந்தார்.

கிறிஸ் ரணதுங்கா பதவியிலிருந்து மாற்றப்பட்டு பிரிட்டிஷ் தூதராக நியமிக்கப்பட்டதை தொடர்ந்து வால்டர் பெரேரா பாதுகாப்பு அமைச்சின் செயலராக பதவி ஏற்றார். எனினும் இவர் இக்காலப் பகுதியில் பல பிரச்சினைகளைச் சந்தித்து தேற்று தனது பதவியை ரஜினாமா செய்துவிட்டார். (கி-இ)

ஹமில்டன் தலைமை வகிப்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு ஒருங்கிணைப்பு குழு முக்கியமான திட்டங்களை தயாரிப்பதற்கும் ஆயுதப் படையினர் பொலிஸார், விசேட அதிரடிப்படையினர் ஆகியோருக்கு பணிப்புரைகளை வழங்குவதற்கும் பொறுப்பாக இருக்கும்.

முக்கியமான பகுதிகளில் ஒருங்கிணைக்கப்பட்ட தலைமையத்தை ஏற்படுத்தி கொள்வதற்கும் இக்குழு பொறுப்பாக இருக்கும். பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கைகளை திட்டமிடுவதற்கும், தயாரிப்பதற்கும் முடிவுகளை செய்தடுத்துவதற்கும் மற்றும் தேவை ஏற்படும் போது கூட்டு பணிகளில் ஈடுபடுவதற்கும் இந்தக் குழுவே பொறுப்பாக இருக்கும்.

சிவில் அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுவதும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீண்டும் வழமையான நிலையை கொண்டுவரும் பொறுப்புகளும் இக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் எனவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (கி-இ)

போருக்கு ஆயத்தமாகும்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை இராணுவ உயர்தளபதிகள் மற்றும் இராணுவ ஜெனரல்களின் மத்தியில் கருத்து வேற்றுமைகள் கடந்த ஆண்டுகளில் நிலவியதாகவும் ஆனால் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள இம்மாற்றங்கள் இந்தகைய கருத்து வேறுபாடுகளை நீங்குமா? என்பது இன்னமும் கேள்விக்குரிய ஒன்றாகவே உள்ளது.

மேலும் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் சில அகற்றப்பட்டது போல பார்வைக்கு தோன்றினாலும் உண்மையில் ஜனாதிபதி டி. பி விஜேதுங்க பாதுகாப்பு சம்பந்தப்பட்ட சில விடயங்களில் மாற்றத்தைமட்டும் ஏற்படுத்தியுள்ளார் என்பது நுணுகி ஆராயும்போது புலப்படும்.

கூட்டுப்படை தலைமையகத்தின் தலைமைப் பொறுப்பை வகித்த ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவே பாதுகாப்பு அமைச்சின் தலைமைப்பொறுப்பையும் ஏற்றகிருப்பதும் நோக்கத்தக்கது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் யாழ் குடாநாடு பெரிய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள இராணுவத்தினர் தயாராகி வருகின்றனர் என விடுதலைப் புலிகள் தரப்பில் செய்தி வெளியாகியுள்ள வேளையில் பாதுகாப்புத்துறையில் இத்தகைய மாற்றங்கள் வெளிவருவதும் இதற்கு வலுக்கூட்டுவதாக அமைந்துள்ளது.

எதிர்காலத்தில் பாதுகாப்பு தொடர்பாக மேற்கொள்ளவுள்ள சகல நடவடிக்கைகளுக்கும் பாதுகாப்பு அமைச்சே பொறுப்பேற்க நேரிடும் என கருத இடமுண்டு என்று பி. பி. சி. தெரிவித்தது. (க-இ)

ராணுவ அணுகுமுறையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் தமது பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது:

இனப்பிரச்சினை தீர்வுக்கு அரசியல்தீர்வு ஒன்றை முன்வைப்பதற்கு கடந்தகால இராணுவ நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்க சாதனை எதனையும் புரியவில்லை என்றுதான் கூற வேண்டும். குறிப்பாக கூட்டுப்படைத் தலைமையகம் கடந்த இரண்டு வருடகாலத்தில் இந்த விடயத்தில் தோல்வியையே தழுவியது.

இப்போது அமைக்கப்பட்டிருக்கும் பாதுகாப்பு இணைப்புக் குழுவானது இந்த விடயத்தில் சாதனை எதனையும் ஏற்படுத்தலாம். அதற்கான அந்தக்குழு என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளுமோ தெரியாது. அதனைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடத்தப்படும் போரில் ராணுவ ரீதியிலான கட்டுப்பாடுகளை விட சிவிலியன் ரீதியிலான கட்டுப்பாடுகள் இருக்கவேண்டுமென்பதற்காக புதிய பாதுகாப்புக் குழு நியமிக்கப்பட்டிருக்கலாம்.

மேலும் இராணுவ அதிகாரிகள் தமது கடமைகளை நிறைவேற்றுவதற்காக அதிகாரத்திலுள்ளவர்களின் அனுமதிக்காக காலம் தாழ்த்துவதை தவிர்க்க முயலவும் கூட்டுப்படை தலைமை அலுவலகம் கலைக்கப்பட்டிருக்கலாம் எனலாவதற்கும் மேலாக இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகான ஒரு இராணுவத் திட்டத்தை எதிர்பார்க்கும் விதமாகவும் புதிய குழு நியமிக்கப்பட்டிருக்கலாம்.

புதிய அமைப்பின் மூலம் வடக்கு கிழக்குப் பகுதியில் புதிய இராணுவ நடவடிக்கைகளை எதிர்பார்க்கலாம். ஆனால் அந்த நடவடிக்கைகள் எப்படி இருக்கும் என்பது சந்தர்ப்ப சூழ்நிலைகளை சாதகமாக வைத்துதான் கூற முடியும். அதற்கு பொறுத்திருந்தே பதில் சொல்ல வேண்டும் என்றார். (இ)

இலவச ஆங்கில வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க மீசாலை அலகு அதன் அலுவலகத்தில் சனி, ஞாயிறு தினங்களில் மாணவர்களுக்கு இலவச ஆங்கில வகுப்புகளை நடாத்தியுருகின்றது. இம்மாதம் முதல் இந்த வகுப்புகள் நடாத்தப்படுவருகின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

செஞ்சிலுவை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தலையிட்டு, அவர்களின் விடுதலைக்கு ஆவன செய்யும்படி. இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளை கொழும்பிலுள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்க தலைமைச் செயலகத் தலைவருக்கு, அவசர செய்தியொன்றை நேற்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக அனுப்பிவைத்துள்ளது. (வி-இ)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் அச்சகத்தாரால், யாழ்ப்பாணம் செல்வநாயகம் மேற்கு வீதி, 66-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under licence Number B/10 886/B